**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 230/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 2 |
| Name : | திரு. ராமலிங்கம் |
| Father's Name/Husband Name: | திரு. செல்லமுத்து |
| Village : | நூத்தப்பூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 48 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 05.08.2025

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1,2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. ப.சா.3 பிரசாத் எனது மகன். ப.சா.4 ரம்யா எனது மகள். ஆஜர் ஆகாத எதிரிகள் இருவரையும் தெரியும். 1வது எதிரி சீனி எனது அண்ணன். என்னுடன் சேர்த்து என்னுடன் பிறந்தவர்கள் 4 நபர்கள். எனது தகப்பனார் இறந்த பிறகு நாங்கள் 4 நபர்களும் நூத்தப்பூரில் ஆளுக்கு ஒன்றரை ஏக்கர் விவசாய நிலத்தை பிரித்துக் கொண்டோம். எனது அண்ணன்கள் தங்கவேலும், கருப்பையாவும் அவர்களுக்குரிய பங்கை எதிரி சீனிக்கு விற்றுவிட்டனர். எங்களுக்கு சொந்தமாக ஒன்றரை ஏக்கர் நிலம் எங்கள் வசம் உள்ளது. எங்கள் அனைவருக்கும் பொதுவான கிணற்றில் மின்சார இணைப்பு உள்ளது. நான் கிணறு மற்றும் மின் இணைப்பை எனக்குரிய பங்கை எதிரி சீனியிடம் கேட்டேன். எதிரி சீனி கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார். அதற்கு பிறது நான் எனது பங்கில் பயிர் செய்து கொண்டிருந்தேன்.

அதன்பிறகு நான் பயிர் செய்யும்போதெல்லாம் அடிக்கடி எனக்கும் 1வது எதிரி சீனிக்கும் சண்டை ஏற்பட்டு வந்தது. அதன்பிறகு என் தகப்பனாரின் பூர்வீக சொத்தில் நான் வீடு கட்டினேன். எதிரி சீனியும், செல்வராஜீம் பூர்வீக சொத்தை அவர்களது பங்கை எனது அண்ணன் தங்கவேலுவிடம் விற்றுவிட்டனர். நான் கட்டியுள்ள வீட்டை பூசும்போது கிணற்றிற்காக கையெழுத்து போட வேண்டும் என்று சொல்லி உள்ளூரில் உள்ள நபர்கள் யாரும் வேலைக்கு வரவிடாமல் எதிரிகள் தடுத்துவிட்டனர். சுமார் 3 வருடங்கள் முன்பு காலை 11 மணியளவில் வெளியூரிலிருந்து நபர்களை அழைத்து வந்து நான் கட்டும் வீட்டில் பூசிக்கொண்டிருக்கும்போது எதிரிகள் செல்வராஜ், சீனி ஆகியோர் உருட்டுக்கட்டையுடன் வந்து எனது மனைவியை அடித்தார்கள். பூசும் வேலையை செய்யக்கூடாது என்று சொல்லியும், ஏன் வேலை செய்கிறாய் என்று சொல்லி தேவிடியா ஏதாவது பேசினால் கொன்னுவிடுவேன் என்று சொல்லி எதிரி செல்வராஜ் பேசினார். சம்பவம் நடந்தது 02.11.2021 ஆகும். எதிரி சீனி உருட்டுக் கட்டையால் எனது மனைவியை முதுகில் அடித்தார். எதிரி செல்வராஜ் எனது மனைவியின் வயிற்றில் எட்டி உதைத்து தேவிடியா என்று பேசினார். அங்கிருந்த ஊர்க்காரர்கள் எதிரிகளை தடுத்தனர். எதிரிகள் அடித்ததில் எனது மனைவி சுயநினைவின்றி பேச்சு மூச்சு இல்லாமல் கிடந்தார். 108 ஆம்புலன்சு மூலமாக சிகிச்சைக்காக எனது மனைவியை மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். இந்த சம்பவம் தொடர்பாக கைகளத்தூர் போலிசார் மருத்துவமனையில் எனது மனைவியை விசாரித்தனர். சம்பவம் சம்பந்தமாக எனது மனைவி வாக்குமூலம் அளித்தார். போலிசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் எதிர்தரப்பு வழக்கறிஞர் முன்வரவில்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/- xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.